## சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை – உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் – பல்வேறு நல உதவிகள் – செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிகள்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (எஸ்1) துறை.**

**அரசு ஆணை ( நிலை ) எண். 84** **நாள்: 18.9.2009.**

**படிக்கப்பட்டது:**

அரசாணை (நிலை) எண். 74, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 24.8.2009.

* * * * * *

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் வக்ஃபு அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், அரசு சார் உறுப்பினர்களாக 10 பேர்களும் அலுவல் சாரா உறுப்பினர்களாக 15 பேர்களையும் கொண்டு இந்நல வாரியம் இயங்கி வருகிறது.

2. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்குவதற்கான வழிமுறைகள், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வது, நலத்திட்ட உதவிகளுக்காக விண்ணப்ப படிவங்கள், விண்ணப்பிக்கும் முறை குறித்த வழிமுறைகள் மற்றும் படிவங்கள் தொகுப்பினை இணைப்பில் கண்டுள்ளவாறு அரசு வெளியிடுகிறது.

3. இவ்வழிமுறைகள் தொகுப்பினை நகல்கள் எடுத்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்குமாறு சிறுபான்மையினர் நல ஆணையர்/முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இவ்வாரியத்தில் உறுப்பினர்களை பதிவு செய்து, நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணியினை முனைப்புடன்

செயல்படுத்தி 15 தினங்களுக்கு ஒரு முறை நல வாரிய உதவிகள் வழங்கியமை குறித்த காலமுறை அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும் சிறுபான்மையினர் நல ஆணையர்/முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

து.நா.இராமநாதன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்:</u>
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை –2.
உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத்தின்
அனைத்து உறுப்பினர்களுக்கும்
(உறுப்பினர்–செயலர் மூலமாக).
முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம்,
சென்னை– 1.
<u>நகல்:</u>
மாண்புமிகு (சுற்றுச் சூழல் மற்றும் வக்ஃபு) அமைச்சர்,
அமைச்சர் அலுவலகம், சென்னை –9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.